
**ஜூலை – 21**

# TNPSC துளிகள்

- FIH ஹாக்கி புரோ லீக் போட்டியில் உலகின் முன்னணி அணியான நெதர்லாந்து அணிக்கு எதிராக அடித்த மகத்தான ஒரு கோலுக்காக என்று இந்திய மகளிர் ஹாக்கி அணியின் வீராங்கனை தீபிகா 2024-ஆம் ஆண்டு பாலிகிராஸ் மேஜிக் திறன் விருதை வென்றுள்ளார்.
    - தீபிகா, 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற புரோ லீக் போட்டியில் புவனேஸ்வர் (ஒடிசா) அணியின் பங்கேற்பின் போது இந்த வெற்றியைப் பெற்றார்.

# தேசியச் செய்திகள்

## மீள் குடியேற்ற உரிமை - உச்ச நீதிமன்றம்




- உச்ச நீதிமன்றம் ஆனது இந்திய அரசியலமைப்பின்படி நிலம் கையகப்படுத்துதலுக்கு நியாயமான இழப்பீட்டையே உத்தரவாதம் செய்கிறது, ஆனால் அது சட்டம் அல்லது குறிப்பிட்ட கொள்கைகளில் வழங்கப் பட்டுள்ளவற்றிற்கு அப்பாற்பட்ட வகையிலான மீள் குடியேற்றத்தினை அல்ல என்று கூறியது.
- நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான வழக்குகளில் 21வது சரத்தின் (வாழ்க்கை மற்றும் வாழ்வாதார உரிமை) நோக்கம் குறித்த இது ஒரு குறிப்பிடத்தக்க தீர்ப்பாகும்.
- அத்தகைய மீள் குடியேற்றம் ஆனது ஒரு கொள்கையின் கீழ் மிக வெளிப்படையாக வழங்கப் படாவிட்டால், வெளியாட்களுக்கு மாற்று நிலம் அல்லது அவர்களுக்கு வீட்டு வசதி வழங்குவது ஒரு மாநிலச் சட்டப்பூர்வ கடமையின் கீழ் வராது என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.
- எந்தவொரு பொது நோக்கத்திற்காகவும் என்று நிலம் கையகப் படுத்தப்படும் போது, யாருடைய நிலம் பறிக்கப்படுகிறதோ, அந்த நபருக்குச் சட்டத்தின் தீர்மானிக்கப்பட்ட கொள்கைகளின்படி பொருத்தமான இழப்பீடு பெற உரிமை உண்டு.
- வழக்கின் பெயர் வீட்டுமனை விற்பனை அதிகாரி ஹரியானா நகர்ப்புற மேம்பாட்டு ஆணையம் மற்றும் நிர்மலா தேவி இடையிலான வழக்கு ஆகும்.
- மத்தியப் பிரதேச மாநிலம் மற்றும் நர்மதா பச்சாவ் அந்தோலன் (2011) மற்றும்

அமர்ஜித் சிங் மற்றும் பஞ்சாப் மாநில அரசு (2010) உள்ளிட்ட முந்தையத் தீர்ப்புகளை குறிப்பிட்டுக் காட்டி, மீள் குடியேற்றம் என்பது அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமை அல்ல என்று அமர்வு வலியுறுத்தியது.

## சுவச் சர்வேக்சன் 2024–25





- சுவச் சர்வேக்சன் 2024-25 விருதுகளை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் வழங்கினார்.
- இது தேசிய தலைநகரான டெல்லியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறங்கள் விவகார அமைச்சகத்தினால் (MoHUA) ஏற்பாடு செய்யப்பட்டது.
- "Waste is Best" என்ற கருத்துருவினை நகர்ப்புற மேம்பாட்டில் சுழற்சி முறையிலான ஒரு பொருளாதாரத்தினை ஊக்குவிப்பதற்கான மையமாக வேண்டி குடியரசுத் தலைவர் விவரித்தார்.
- இந்த ஆண்டு, சூப்பர் சுவச் லீக் நகரங்கள் மற்றும் ஐந்து வெவ்வேறு மக்கள்தொகை பிரிவுகளில் முதல் மூன்று தூய்மையான நகரங்கள் உள்ளிட்ட நான்கு பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டன.
- இந்த ஆண்டு சுவச் சர்வேக்சன் ஆனது, சிறிய நகரங்கள் "ஒரு நகரம், ஒரு விருது" என்ற கொள்கையின் கீழ் பெரிய நகரங்களுடன் மிகச் சமநிலையில் போட்டியிட உதவும் வகையில், எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் உள்ளடக்கிய மதிப்பீட்டுக் கட்டமைப்பை அறிமுகப்படுத்தியது.
- சூப்பர் ஸ்வச் லீக் என்பது சுவச் பாரத் - நகர்ப்புறம் (SBM-U) என்ற திட்டத்தின் சுவச் சர்வேக்சன் கட்டமைப்பின் கீழ் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பிரிவாகும்.
- கடந்த சுவச் சர்வேக்சன் விருதுகளில் தொடர்ந்து மிகவும் சிறந்தச் செயல்திறனை வெளிப்படுத்திய நகரங்கள் மட்டுமே சூப்பர் சுவச் லீக் பிரிவில் அடங்கும்.
- இந்தூர் நகரானது, மீண்டும் எட்டாவது ஆண்டாக இந்தியாவின் மிகவும் தூய்மையான நகரமாக தனது பட்டத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- சூரத் இரண்டாவது இடத்தையும், நவி மும்பை மூன்றாவது இடத்தையும் பிடித்தது.
- விஜயவாடா அவற்றைத் தொடர்ந்து நான்காவது இடத்தைப் பிடித்தது.
- அகமதாபாத், போபால் மற்றும் லக்னோ ஆகியவை புதிய தலைமுறை நுட்பத்திலான

சிறந்த தூய்மையான நகரங்களாக அறிவிக்கப்பட்டன.

- பிரயாக்ராஜ் சிறந்த கங்கை நகரமாக அங்கீகரிக்கப்பட்டது.
- துப்புரவுத் தொழிலாளர்களின் பாதுகாப்பு, கண்ணியம் மற்றும் அவர்களின் நலனுக்கு முன்னுரிமை அளித்ததற்காக வேண்டி விசாகப்பட்டினம், ஜபல்பூர் மற்றும் கோரக்பூர் ஆகியவை சிறந்த சஃபாய்மித்ரா சுரக்சித் ஷெஹர்ஸ் என்ற ஒரு அங்கீகாரத்தைப் பெற்றன.
- மகா கும்பமேளாவின் போது உருவான நகர்ப்புறக் கழிவுகளை மிக வெற்றிகரமாக மேலாண்மை செய்ததற்காக என்று உத்தரப் பிரதேச மாநில அரசு, பிரயாக்ராஜ் மேளா அதிகாரி மற்றும் பிரயாக்ராஜ் மாநகராட்சிக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது.
- 3 முதல் 10 லட்சம் மக்கள் தொகை கொண்ட நகரங்களின் பிரிவில், நொய்டா மிகவும் தூய்மையான நகரமாக உருவெடுத்தது, அதைத் தொடர்ந்து சண்டிகர் மற்றும் மைசூர் இடம் பெற்றுள்ளன.
- சுமார் 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களின் பிரிவில் அகமதாபாத் முதலிடத்தைப் பிடித்தது.
- மைசூர் 3 லட்சம் முதல் 10 லட்சம் மக்கள் தொகை வரம்பிற்குள், தூய்மையான நகரத் தர வரிசையில் சிறப்பானச் செயல் திறனுடன், 'சூப்பர் சுவச் லீக்' (SSL) பிரிவில் இடம் பிடித்தது.
- 3 லட்சம் முதல் 10 லட்சம் மக்கள் தொகை வரம்பிற்குள் உள்ள மற்ற நகரங்கள் (2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி) சண்டிகர், நொய்டா, உஜ்ஜைன், காந்திநகர் மற்றும் குண்டூர் ஆகியவை SSL நகரங்களின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

## ஆகாஷ் பிரைம் வான்வழிப் பாதுகாப்பு அமைப்பு - லடாக்





- லடாக்கில் 15,000 அடி (4,500 மீட்டருக்கு மேல்) உயரத்தில் ஆகாஷ் பிரைம் வான்வழிப் பாதுகாப்பு அமைப்பை இந்திய இராணுவம் வெற்றிகரமாக சோதித்தது.
- இது உயரமான வான்வழிப் பாதுகாப்பில் ஒரு முக்கிய முன்னேற்றத்தைக் குறிக்கிறது.
- இது மெய்க் கட்டுப்பாட்டு பகுதி (LAC) மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதி (LoC) போன்ற மிக முக்கியமான எல்லைப் பகுதிகளில் இந்தியாவின் பாதுகாப்பு நிலையை மிகவும் நன்கு வலுப்படுத்துகிறது.
- இந்த நிலத்திலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கும் எறிகணை (SAM) அமைப்பு

ஆனது மேம்படுத்தப் பட்ட துல்லியம், இயக்கம் மற்றும் அனைத்து வானிலை செயல் திறனையும் கொண்டுள்ளது.

- இது ஆகாஷ் எறிகணை அமைப்பின் மேம்படுத்தப்பட்ட வடிவமாகும்.
- பாதுகாப்பு அமைச்சகத்தின் கூற்றுப்படி, ஆகாஷ் பிரைம் அமைப்பு ஆனது
    - இந்திய இராணுவத்தின் வான்வழிப் பாதுகாப்புப் பிரிவுகள்
    - பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO),
    - பாதுகாப்பு பொதுத் துறை நிறுவனங்களான பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் (BDL) மற்றும்
    - பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பு மூலம் உருவாக்கப் பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## சிரியாவில் ட்ரூஸ் குழுவின் மோதல்





- தெற்கு சிரியாவில் ட்ரூஸ் ஆயுதக் குழுக்களுக்கும் சன்னி பெடோயின் என்ற வகை இன உறுப்பினர்களுக்கும் இடையே ஒரே இரவில் மீண்டும் மோதல்கள் வெடித்தன.
- சிரியாவின் அரசாங்கப் படைகள் ஆனது, ட்ரூஸ் பெரும்பான்மை மிக்க சுவீடா தெற்கு மாகாணத்திலிருந்து வெளியேறின.
- ட்ரூஸ் மதச் சிறுபான்மையினருடன் தொடர்புடையப் போராளிகளுடன் பல நாட்கள் நடந்த மோதல்களுக்குப் பிறகு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.
- ட்ரூஸ் இனத்தவர்கள் இஸ்ரேலிலும், சிரியாவிலும் மிக கணிசமான எண்ணிக்கையில் காணப் படுகின்றனர் என்பதோடு அவர்கள் இஸ்ரேல் நாட்டில் மிகவும் விசுவாசமான சிறுபான்மையினராகவும் பெரும்பாலும் இராணுவத்தில் பணியாற்றுபவர்களாகவும் உள்ளனர்.

- ட்ரூஸ் மதப் பிரிவு ஆனது சுமார் 10 ஆம் நூற்றாண்டில் ஷியா இஸ்லாமியத்தின் ஒரு கிளையான இஸ்மாயிலிசத்தின் ஒரு பிரிவாகத் தொடங்கியது.
- மற்ற ட்ரூஸ் இனத்தவர்களில் பெரும்பாலோர் சிரியாவில் உள்ள கோலான் ஹைட்ஸ் பகுதி உட்பட லெபனான் மற்றும் இஸ்ரேலில் வசிக்கின்றனர்.
- 1967 ஆம் ஆண்டில் நடைபெற்ற மத்தியக் கிழக்குப் போரில் இஸ்ரேல் சிரியாவிலிருந்து கோலன் ஹைட்ஸ் பகுதியைக் கைப்பற்றி 1981 ஆம் ஆண்டில் அதனுடன் இணைத்தது.

# பொருளாதாரச் செய்திகள்

## VCF தீர்வுத் திட்டம் 2025




- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) ஆனது 2025 ஆம் ஆண்டு VCF தீர்வுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மாற்று முதலீட்டு நிதி (AIF) முறைக்கு மாறிய துணிகர மூலதன நிதிகளை (VCF) நிறுத்துவது தொடர்பான மீறல்களைத் தீர்ப்பதை, எளிதாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2012 ஆம் ஆண்டு மே மாதத்தில், பழைய VCF விதிமுறைகளை மாற்றியமைத்த AIF விதிமுறைகளை SEBI அறிவித்தது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சுபன்ஷு சுக்லாவின் வருகை - ISS பரிசோதனைகள் 2025

- இந்திய விண்வெளி வீரர் குழுத் தலைவர் மற்றும் இந்திய விமானப்படை அதிகாரி சுபன்ஷு சுக்லா ஜூலை 15 ஆம் தேதியன்று சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து புவிக்குத் திரும்பினார்.
- சர்வதேச விண்வெளி நிலையத்தில் 18 நாட்கள் தங்கி, பூமியை 288 முறை சுற்றி வந்த பிறகு அவர் திரும்பினார்.
- அமெரிக்காவில் உள்ள ஒரு தனியார் விண்வெளி நிறுவனமான ஆக்ஸியம் ஸ்பேஸ் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சர்வதேச மனித விண்வெளிப் பயணமான ஆக்ஸியம்-4 பயணத்தின் ஓர் அங்கமாக அவர் இருந்தார்.

- சுபன்ஷு சுக்லா வணிக ரீதியான சுற்றுப்பாதை விண்வெளிப் பயணத்தின் முதல் இந்திய விமானியாகவும், ஒரு தனியார் அமெரிக்கப் பயணத்தின் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்தினை அடைந்த முதல் இந்தியராகவும் ஆனார்.





- இது நாசாவின் உள்கட்டமைப்புடன் கூடிய வணிக ரீதியான விண்வெளிப் பயணத்துடன் இணைத்து, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு முழுமையாக தனியார் குழுவினருடன் அனுப்பப்பட்ட முதல் பயணங்களில் ஒன்றாகும்.
- அமெரிக்காவின் கலிபோர்னியாவின் சான் டியாகோ கடற்கரையில் பசிபிக் பெருங்கடலில் ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் பெட்டகம் இறங்கியது.
- இது ஷுக்லாவுடன் சேர்த்து, இந்த பயணத்தின் தளபதியான அமெரிக்காவைச் சேர்ந்த பெக்கி விட்சன், போலந்தைச் சேர்ந்த ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி - விஸ்னீவ்ஸ்கி மற்றும் ஹங்கேரியைச் சேர்ந்த திபோர் கபு ஆகிய நான்கு விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு அழைத்துச் சென்றது.
- குழுவினர் ஃபால்கன் 9 ஏவுகலத்தினைப் பயன்படுத்தி ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்குப் பயணம் மேற்கொண்டனர்.
- விண்வெளியில் இருந்த காலத்தில், ஷுக்லா ஏழு நுண் ஈர்ப்பு விசை சோதனைகளையும் நடத்தி முடித்தார் மற்றும் பிற திட்டமிடப்பட்ட அறிவியல் ஆய்வுப் பணிகளையும் மேற்கொண்டார்.
- இதில் நீர்க் கரடிகளின் (டார்டிகிரேடு) இந்திய வகை, தசைத் திசு உருவாக்கம், வெந்தயம் மற்றும் பச்சைப்பயறு விதைகளின் முளைப்பு, சயனோபாக்டீரியா, மைக்ரோ ஆல்கா, பயிர் விதைகள் மற்றும் வாயேஜர் காட்சி பற்றிய ஆராய்ச்சி ஆகியவை அடங்கும்.
- சுக்லாவின் சோதனைகளில் மிகவும் முக்கியமான ஒன்று, விண்வெளி நுண் ஆல்காக்களின் உணவு, ஆக்ஸிஜன் மற்றும் உயிரி எரிபொருட்களை உருவாக்கும் ஒரு திறன் ஆய்வு ஆகும்.
- நுண் ஈர்ப்பு விசையில் நுண் ஆல்காக்களின் தகவமைவு நீட்டிக்கப்பட்ட விண்வெளிப் பயணங்களின் போது மனித வாழ்க்கையை அங்கு நிலை நிறுத்துவதற்கு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

- "நீர்க் கரடிகள்" என்றும் அழைக்கப்படும் டார்டிகிரேடுகள், டைனோசர்கள் கிரகத்தில் வாழ்வதற்கு சுமார் 400 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே, சுமார் 600 மில்லியன் ஆண்டுகளாக வாழ்ந்து வரும் வலுவான நீர்வாழ் விலங்குகள் ஆகும்.
- இந்த விலங்குகளை தகவமைவு கொண்டதாக மாற்றச் செய்வதற்கு காரணமான மரபணுக்களை அடையாளம் காண்பதே இந்தப் பரிசோதனையின் மிகவும் முதன்மை நோக்கமாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## புல்வெளி வாழ் பறவைகள் கணக்கெடுப்பு – காசிரங்கா




- முதலாவது புல்வெளிப் பறவைகள் கணக்கெடுப்பு ஆனது அசாமில் உள்ள காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் வளங்காப்பகத்தில் (KNPTR) நடத்தப்பட்டது.
- இது காசி ரங்காவின் மூன்று வனவிலங்குப் பிரிவுகளில் 43 புல்வெளி இனங்களைப் பதிவு செய்தது.
- அவற்றில் மிகவும் அருகி வரும் வங்காள வரகுக் கோழி, அருகி வரும் ஃபின்ஸ் வீவர் மற்றும் சதுப்பு நில புல் கீச்சான் ஆகியவை அடங்கும்.
- மீதமுள்ள 40 இனங்களில், கருப்பு மார்பக கிளி பில், சதுப்பு நில சிலம்பன், சதுப்பு நிலக் கௌதாரி, ஜெர்டனின் சிலம்பன், மெலிந்த அலகு சிலம்பன் மற்றும் கருமீசை புல் குருவி ஆகிய ஆறு இனங்கள் எளிதில் பாதிக்கப்படக் கூடிய பிரிவில் இருந்தன.
- இந்தக் கணக்கெடுப்பின் சிறப்பம்சம் என்னவென்றால், உள்நாட்டில் துகுரா சோராய் என்று அழைக்கப்படும் ஃபின்ஸ் வீவர் மிகவும் வெற்றிகரமாக இனப்பெருக்கம் செய்து வருகிறது.
- மரங்களின் மேல் கூடு கட்டுவதில் தேர்ச்சிப் பெற்ற இந்த குறிப்பிடத் தக்க பறவை, புல்வெளி ஆரோக்கியத்தின் முக்கிய குறிகாட்டியாகும்.
- 1,174 சதுர கிலோ மீட்டர் பரப்பிலான காசிரங்கா புல்வெளிகள், வனப்பகுதிகள் மற்றும்

ஈர நிலங்களின் கலவையாகும்.

- மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவை இந்தியாவில் புல்வெளி பறவை பன்முகத் தன்மையின் அடிப்படையில் வளம் நிறைந்த ஒன்றாகும்.

## சிவிங்கிப் புலிகளின் இடமாற்றம்





- குனோ தேசியப் பூங்காவிலிருந்து மத்தியப் பிரதேச மாநிலத்தின் காந்தி சாகர் சரணாலயத்திற்கு சிவிங்கிப் புலிகள் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளன.
- குஜராத்தில் உள்ள பான்னி புல்வெளிகள் இந்திய துணைக் கண்டத்தில் மிகப்பெரிய பரப்பளவாகும்.
- மேலும் இது நாட்டில் சிவிங்கிப் புலிகளின் மறுவாழ்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 10 இடங்களில் ஒன்றாகும்.
- தற்போது இந்த பெரும் பூனை இனத்தினைக் கொண்டிருக்க என்று இது முழுமையாக தயாராக உள்ளது.
- இது ஒரு தனித்துவமான உவர் தன்மை தாங்கும் புல்வெளி சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் ஆசியாவின் மிகப்பெரிய வெப்பமண்டல புல்வெளி ஆகும்.
- இது மால்தாரிஸ், ரபாரிஸ், முத்வாஸ் மற்றும் மேக்வால்ஸ் போன்ற சில மேய்ச்சல் சமூகங்கள் வசித்து வந்த பகுதியாகும்.
- ஆப்பிரிக்காவில் சிவிங்கிப் புலிகளின் மிகவும் இயற்கையான வாழ்விடத் தேர்வுகளில் புல்வெளிகள், சவன்னாக்கள் மற்றும் புதர்க்காடுகள் அடங்கும்.
- ஜாம்நகரில் உள்ள ரிலையன்ஸ் அறக்கட்டளையின் மீட்பு, பாதுகாப்பு மற்றும் மறு வாழ்வு வசதியான வந்தாரா, பான்னி புல்வெளிகளில் புள்ளி மான்களை மறு அறிமுகப் படுத்தியுள்ளது.
- மறு அறிமுகப்படுத்தும் முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நமீபியாவிலிருந்து எட்டு மற்றும் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தென்னாப்பிரிக்காவிலிருந்து 12 என 20 ஆப்பிரிக்க சிவிங்கிப் புலிகள் குனோ தேசியப் பூங்காவிற்கு கொண்டு வரப்பட்டன.

- மத்தியப் பிரதேசத்தின் குனோ தேசியப் பூங்கா, ஆப்பிரிக்காவிலிருந்து இடமாற்றம் செய்யப் பட்ட சிவிங்கிப் புலிகள் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் தளம் ஆகும்.
- சிவிங்கிப் புலிகளின் அறிமுகத்திற்கான செயல் திட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள பிற சாத்தியமான தளங்கள்
  - சத்தீஸ்கரில் உள்ள குரு காசிதாஸ் தேசியப் பூங்கா;
  - துப்ரி வனவிலங்குச் சரணாலயம், சஞ்சய் தேசியப் பூங்கா, பாக்தாரா வனவிலங்கு சரணாலயம், மத்தியப் பிரதேசத்தில் வீராங்கனை துர்காவதி புலிகள் சரணாலயம்;
  - இராஜஸ்தானில் பாலைவன தேசியப் பூங்கா மற்றும் ஷாகர் புல்வெளிகள் மற்றும்
  - உத்தரப் பிரதேசத்தில் கைமூர் வனவிலங்கு சரணாலயம்.
- தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) இதற்கான முதன்மை முகமை ஆகும்.
- NTCA என்பது MoEFCCC அமைச்சகத்தின் கீழான, 2006 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் விதிகளின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- சிவிங்கிப் புலிகளானது உலகின் மிக வேகமாக ஓடும் பாலூட்டி மற்றும் இந்தியாவில் அழிந்துபோன ஒரே பெரிய மாமிச உண்ணி (1952) ஆகும்.
- இது ஆசியாவில் கிழக்கு ஈரானின் மிக வறண்ட பகுதிகளில் மற்றும் ஆப்பிரிக்காவில் மட்டுமே காணப்படுகிறது.
- சிவிங்கிப் புலிகள் மற்ற பெரும் பூனை இனங்களைப் போல (சிங்கங்கள், புலிகள், சிறுத்தைகள் மற்றும் ஜாகுவார்) உறுமுவதில்லை.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்


## OECD-FAO வேளாண்மை குறித்த கண்ணோட்ட அறிக்கை 2025/2034




- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (OECD) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) ஆகியவை இணைந்து இந்த 21வது அறிக்கையினை வெளியிட்டன.

- 2034 ஆம் ஆண்டிற்குள், உலகின் தானிய உற்பத்தியில் சுமார் 40 சதவீதம் மட்டுமே மனிதர்களால் நேரடியாக நுகரப்படும்.
- சுமார் 27 சதவீதம் என்ற வளர்ந்து வரும் பங்கு ஆனது உயிரி எரிபொருள் மற்றும் தொழில்துறை பயன்பாடுகளுக்கு அளிக்கப்படும்.
- இந்தியா, பிரேசில் மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளின் அதிகப்படியான ஒரு தேவையுடன், உயிரி எரிபொருள் தேவையானது ஆண்டுதோறும் சுமார் 0.9% வளர்ச்சி அடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- பருத்தியின் உலகளாவிய பயன்பாடு அதிகரித்துள்ளது என்பதோடு இந்தியா சீனாவை முந்தி முன்னணி உற்பத்தியாளராக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

## QS அமைப்பின் மாணவர்களுக்கான மிகவும் செலவு குறைந்த நகரம் 2026





- இது குவாக்கரெல்லி சைமண்ட்ஸ் என்ற நிறுவனத்தினால் ஆண்டுதோறும் வெளியிடப் படுகிறது.
- இந்தக் குறியீட்டைத் தயாரிக்கும் போது பாதுகாப்பு, மாசுபாடு, வாழ்வதற்குத் தேவையான செலவினம், விரும்பத்தக்க தன்மை மற்றும் முதலாளித்துவச் செயல்பாடு போன்ற பல்வேறு காரணிகளை QS கருத்தில் கொண்டது.
- இந்தத் தரவரிசையில் சியோல், டோக்கியோ மற்றும் இலண்டன் ஆகியவை முதல் மூன்று இடத்தில் உள்ள நகரங்களாகும்.
- சியோல் மாணவர்களுக்கான உலகின் சிறந்த நகரமாகும் என்ற நிலையில் மேலும் இலண்டன் தொடர்ந்து ஆறு ஆண்டு காலமாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- டெல்லி, மும்பை, பெங்களூரு மற்றும் சென்னை ஆகிய நான்கு முக்கிய இந்திய நகரங்கள் இந்தக் குறியீட்டில் வலுவான முன்னேற்றத்தைக் கண்டன.
- டெல்லி நகரமானது இந்தக் குறிகாட்டியில் உலகளவில் முதல் இடத்தைப் பிடித்து மாணவர்களுக்கான உலகின் மிகவும் செலவு குறைந்த நகரமாக உருவெடுத்துள்ளது.
- சென்னை கடந்த ஆண்டு இருந்த 140வது இடத்திலிருந்து 128வது இடத்திற்கு முன்னேறி

உள்ளது.

- குறிப்பாக அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு அல்லது ஆஸ்திரேலியா போன்ற பிரபலமான இடங்களுடன் ஒப்பிடச் செய்யும் போது, இந்தியாவின் மிக மேம்பட்ட தரவரிசைக்குப் பின்னால் உள்ள ஒரு முக்கியக் காரணி அதன் நகரங்களில் கல்வி மற்றும் வாழ்வதற்கு தேவையான செலவு ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது.
- மலிவு விலையைத் தாண்டி, இந்திய நகரங்களும் மிகவும் வலுவான முதலாளித்துவச் செயல்பாட்டை கொண்டுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## கால்நடை மற்றும் கோழி வளர்ப்புக்கு வேளாண்மை அந்தஸ்து




- கால்நடை வளர்ப்புக்கு வேளாண் அந்தஸ்து வழங்கிய முதல் இந்திய மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- இந்த முடிவின்படி, கால்நடை சார்ந்த நடவடிக்கைகள் தற்போது வேளாண்மைக்கு இணையாக நடத்தப்படும்.
- இது விவசாயிகளுக்கு மின்சாரம், உள்ளாட்சி அமைப்பு வரி, கடன் மானியங்கள் மற்றும் வேளாண் விதிமுறைகளின் கீழ் சூரிய ஆற்றலுக்கான மானியம் ஆகியவற்றை அணுக அனுமதிக்கிறது.
- இந்தியாவின் வேளாண் கொள்கைகள் மிகவும் பாரம்பரியமாக தானியங்கள், பருப்பு வகைகள், பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்ற பயிர் உற்பத்தியில் மட்டும் கவனம் செலுத்துகின்றன.
- ஆனால் கால்நடை வளர்ப்பு ஒரு தனிப்பட்ட அல்லது "சார்பு நிலை" நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

### இந்தியாவின் முதல் பழங்குடியின மரபணுத் தொகுதி வரிசையாக்கத் திட்டம்

- பழங்குடியினச் சமூகங்களை மட்டுமே மையமாகக் கொண்ட மரபணுத் தொகுதி வரிசையாக்க முன்னெடுப்பைத் தொடங்கிய முதல் இந்திய மாநிலமாக குஜராத் மாறி உள்ளது.
- இந்த முன்னெடுப்பு ஆனது, அம்மாநிலத்தின் 17 மாவட்டங்களில் உள்ள பழங்குடியினச் சமூகங்களைச் சேர்ந்த 2,000 நபர்களின் மரபணுக்களை வரிசைப்படுத்தும்.
- "குஜராத்தில் உள்ள பழங்குடியின மக்களுக்கான குறிப்பு சார் மரபணு தரவுத் தளத்தை உருவாக்குதல்" என்ற தலைப்பிலான இந்தத் திட்டத்தினை குஜராத் மாநில உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் (GBRC) செயல்படுத்தி வருகிறது.
- இந்த முன்னெடுப்பு ஆனது அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை, தலாசீமியா மற்றும் சில பரம்பரை வழியானப் புற்றுநோய்கள் போன்ற மரபணு கோளாறுகளை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் ஒரு குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட இடத்தினை முக்கிய இலக்காக வைத்து சிகிச்சை அளிப்பதில் கவனம் செலுத்தும்.
- சேகரிக்கப்பட்ட மரபணுத் தரவு ஆனது இயற்கை நோய் எதிர்ப்பு சக்தி தொடர்பான குறியீடுகளை அடையாளம் காணவும், தனிப் பயனாக்கப்பட்ட சுகாதாரத் தீர்வுகளின் உருவாக்கத்தினை ஆதரிக்கவும் பயன்படுத்தப்படும்.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### கலிங்க ரத்னா விருது 2024



- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, ஒடிசா மாநிலத்தின் கட்டாக்கில் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு 2024 ஆம் ஆண்டிற்கான கலிங்க ரத்னா விருதினை வழங்கினார்.
- 15 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஒடியா கவிஞர் ஆதிகாபி சரளா தாஸின் 600வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது இந்த விருது வழங்கும் விழா நடைபெற்றது.
- சரளா தாஸ் அவர்கள் பெரும்பாலும் ஒடியா இலக்கியத்தின் ஆதிகாபி (முதல் கவிஞர்) என்று குறிப்பிடப்படுகிறார்.
- சரளா தாஸ் ஒடிய மகாபாரதத்தை இயற்றிய பெருமைக்குரியவர் ஆவார்.

## BIMSTEC நாடுகளின் 2வது துறைமுக மாநாடு




- BIMSTEC நாடுகளின் 2வது துறைமுக மாநாடு ஆனது ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப் பட்டினத்தில் இந்திய அரசினால் நடத்தப்பட்டது.
- இந்த மாநாட்டின் கருத்துரு "Navigating the Future: Blue Economy, Innovation and Sustainable Partnerships" என்பதாகும்.
- மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் (MoPSW) இந்த மாநாட்டினைத் தொடங்கி வைத்தார்.
- வங்காளதேசம், பூடான், இந்தியா, மியான்மர், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய உறுப்பினர் நாடுகள் இதில் பங்கேற்றன.
- BIMSTEC என்பது பல்துறைத் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு என்பதைக் குறிக்கிறது.
- இது 1997 ஆம் ஆண்டில் பாங்காக் பிரகடனம் கையெழுத்தானதன் மூலம் உருவாக்கப் பட்ட ஒரு பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பாகும்.

- இது வங்காள விரிகுடாவின் எல்லையில் உள்ள தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளை ஒன்றிணைக்கிறது.

# இதரச் செய்திகள்

## இந்தியாவின் இலகுரகச் செயல்திறனுடைய உறுதியான சக்கர நாற்காலி





- சென்னையின் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, பிறரைச் சார்ந்திராத வகையில் சுதந்திரத்தை அளிக்கின்ற 8.5 கிலோ எடையுள்ள புதிய சக்கர நாற்காலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அதன் சமீபத்தியக் கண்டுபிடிப்பான YD One ஆனது இந்தியாவின் அதி இலகுரக செயல் திறனுடைய உறுதியான சக்கர நாற்காலி என்று நிறுவனம் கூறுகிறது.
- இந்தச் சாதனம் ஆனது விண்வெளிப் பயன்பாட்டுத் தரப் பொருளால் ஆன ஒற்றைச் சட்டத்தைக் கொண்டுள்ளது.
- சந்தையில் உள்ள பெரும்பாலான சக்கர நாற்காலிகள் என்பவை மிகவும் கனமான மற்றும் மருத்துவமனை தரத்தில் இருந்தன என்பதோடு அவை பொதுவெளி பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்த தகுதியற்றவையாகும்.

## மரபணு மாற்றம் செய்யப்பட்ட மக்காச்சோளத்தின் கள சோதனைகள் 2025

- லூதியானாவில் உள்ள பஞ்சாப் வேளாண் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வரும் காரீப் கால (கோடை) பயிர் பருவத்தில் இரண்டு வகையான மரபணு மாற்றம் செய்யப் பட்ட (GM) மக்காச்சோளத்தின் கள சோதனைகள் தொடங்க உள்ளன.
- இந்த மரபணு மாற்றம் செய்யப்பட்ட (GM) மக்காச் சோள வகையானது களைக் கொல்லி எதிர்ப்புத் திறன் (HT) மற்றும் பூச்சிக்கொல்லி எதிர்ப்புத்திறன் (BT) ஆகிய இரண்டையும் கொண்டுள்ளது.

- பேயர் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இந்த மக்காச்சோள வகையானது BRL-I மற்றும் BRL-II உயிரியல் பாதுகாப்புச் சோதனை கட்டத்தில் உள்ளது.
- களைக்கொல்லி-தாங்குதிறன் கொண்ட மக்காச்சோள கலப்பினங்களில் கிளைபோ சேட்-கே உப்பைப் பயன்படுத்துவதன் மூலம் களைக்கொல்லி எதிர்ப்புத் திறன் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட லெபிடோப்டிரான் பூச்சிகளிலிருந்து பாதுகாக்கப்பட்ட மக்காச் சோள கலப்பினங்களின் செயல்திறனை இந்த சோதனைகள் ஆய்வு செய்யும்.
- 2018 ஆம் ஆண்டில், பஞ்சாப் அரசாங்கமானது கிட்டத்தட்ட அனைத்துப் பயிர்களிலும் பல்வேறு வகையான களைகளைக் கட்டுப்படுத்துவதற்காக மாநிலத்தில் பரவலாகப் பயன்படுத்தப்படும் கிளைபோசேட் வகை களைக்கொல்லியின் விற்பனையைத் தடை செய்தது.
- பஞ்சாப் மாநில அரசாங்கத்திடமிருந்து ஒப்புதல் பெற்ற பிறகு, மரபணுப் பொறியியல் மதிப்பீட்டுக் குழு (GEAC) ஆனது சோதனைகளுக்கு ஒப்புதல் அளித்த சில நாட்களுக்குப் பிறகு இந்த கள சோதனைகள் நடைபெற்றன.
- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தில் (MoEF&CC) செயல் படுகின்ற GEAC ஆனது மரபணு மாற்றப்பட்டப் பயிர்கள் துறைக்கான நாட்டின் உயர் மட்ட ஒழுங்குமுறை அமைப்பாகும்.
- GEAC என்பது 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்ட சட்டப்பூர்வக் குழுவாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★